# ஒழுங்கீன நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொழுது போக்கு மையங்கள்:
# கையூட்டு பெற்றதாக டி.பி.கே.எல்.துணை இயக்குநர், அமலாக்க அதிகாரி மீது குற்றச்சாட்டு



ஷா ஆலம், ஆக. 16-

ஒழுங்கீன நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறப்படும் கட்டடங்களை பாதுகாக்க கையூட்டுகள் கேட்டு பெற்றதாக கோலாலம்பூர் மாநகர மன்ற (டி.பி.கே.எல்.) துணை இயக்குநரும் ஓர் அமலாக்க அதிகாரியும் நேற்று குற்றஞ்சாட்டப்பட்டனர்.

எனினும், நேற்று காலை செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி டத்தோ அனித்தா ஹருண் முன்னிலையில் நிறுத்தப்பட்ட முகமட் இர்வான் அப்துல்லாவும் (வயது 44) ஸஹாரி முகமட்டும் (வயது 34) குற்றச்சாட்டை மறுத்தனர்.

கடந்த பிப்ரவரி மாதம், பூச்சோங் அருகே சான்சாய் கோக் பராமரிப்பின் கீழ் செயல்பட்ட ஓர் உரிம மில்லாத பொழுதுபோக்கு மையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமலிருக்க கையூட்டாக மாதந்தோறும் 200,000 வெள்ளி கோரியதாக அவ்விருவரும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

மலேசிய ஊழல் தடுப்பு ஆணைய (எம்.ஏ.சி.சி.) சட்டத்தின் 16(ஏ)(ஏ) பிரிவின் கீழ் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதிக பட்சம் 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் கையூட்டு தொகையில் ஐந்து மடங்கிற்கு குறையாத அபராதமும் விதிக்கப்படும்.

அந்த 62 வயது பராமரிப்பாளரிடம் இருந்து அவ்விருவரும் அந்த பொழுது போக்கு மையத்தில் கடந்த பிப்ரவரி மாதம் மாதாந்திர லஞ்ச தொகையாக 160,000 வெள்ளி பெற்றதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வழக்கு முடிவுக்கு வரும் வரை ஒவ்வொரு மாதமும் எம்.ஏ.சி.சி. அலுவலகத்தில் ஆஜராகுமாறும் கடப்பிதழ்களை ஒப்படைக்குமாறும் அவ்விருவருக்கும் நீதிபதி உத்தரவிட்டார். அவ்விருவருக்கும் தலா 15,000 வெள்ளி ஜாமீன் அனுமதித்த நீதிமன்றம் வழக்கின் நிலை குறித்து முடிவு செய்ய செப்டம்பர் 30ஆம் தேதியை நிர்ணயித்தது.